**வீதி அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் ∴ நீடித்தல்**

I கேள்வி கோரல் மூலம் பெற்றுக் கொண்ட வீதி அனுமதிப்பத்திரமாயின் கேள்வி கோரல் நிபந்தனையின் பிரகாரம் உரிய கட்டணம் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II வீதி அனுமதிப்பத்திரம் வழங்கும் போது சாதாரண அல்லது சொகுசு பஸ்வண்டிக்காக மாதமொன்றுக்கு 417.∴ஸ்ரீ ரூபா விகிதம் வருடமொன்றுக்கு 5000.∴ஸ்ரீ ரூபா அறவிடப்படும் என்பதுடன் லேபிள் ஒன்றுக்காக 200.∴ஸ்ரீ ரூபாவும், மோ.போ.ஆ 250.∴ஸ்ரீ ரூபாவும் அறவிடப்படும். நீடிப்பதற்கான விண்ணப்பப்படிவம் 50.∴ஸ்ரீ ரூபாவும், மாற்றம் செய்வதற்கான விண்ணப்பப்பத்திரம் 100.∴ஸ்ரீ ரூபாவும் ஆகும்.

III வீதி அனுமதிப்பத்திரம் காலவதியாகும் தினத்துக்கு முன்னர் வாராந்த வேலை நாட்களில் 07 நாட்களுக்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தை நீடித்துக் கொள்ளல் வேண்டும்.

IV அவ்வாறு இல்லாது அனுமதிப்பத்திரம் காலாவதியானதன் பின்னர் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டும்.

V பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் நிழல்படப் பிரதிகள் விகிதம்

- கோரப்படுகின்ற காலத்துக்கு செல்லுபடியாகும் வாகனத்தின் தகுதிச் சான்றிதழ்.
- அனைத்து பயணிகளுக்கும் மற்றும் ஆதனங்களுக்குமான மூன்றாம் தரப்பு மட்டுப்படுத்தப்படாத காப்புறுதி.
- வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் அல்லது மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள வாகனத்தின் பதிவு தொடர்பான சான்றிதழ்.
- சாரதியின் மருத்துவச் சான்றிதழ்
- கடந்த மாதத்துக்காக பெற்றுக் கொண்ட லொக் பத்திரம் மற்றும் கட்டணத்தை செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு.
- நடத்துநருக்கான அனுமதிப் பத்திரம்.
- பஸ்வண்டி பரிசோதனைக்காக 500.∴ஸ்ரீ ரூபா செலுத்திய பற்றுச் சீட்டு

**உரிமையாளர் வெளிநாடு சென்றிருக்கும் சந்தர்ப்பத்தில்**

- உரிமையாளர் வெளிநாடு சென்றிருக்கின்றமை பற்றி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் வழங்கியுள்ள உறுதிப்படுத்திய கடிதம்.
- உரிய தூதரகம் ஊடாக பதிவு செய்த உரிமையாளரினால் புதிய உரிமையாளருக்கு வழங்கிய உடன்படிக்கைப் பத்திரம்
- அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்டிருப்பின் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். (சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று செல்லுபடியானது என பதிவு செய்யும் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட)

VI குறுகிய காலத்துக்காக வழங்கப்படுகின்ற தற்காலிக வீதி அனுமதிப்பத்திரத்தை மீண்டும் நீடிப்பதற்காக தலைமை அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கும் போது உரிய பிராந்திய அலுவலகத்தில் பஸ்வண்டியை சேவையில் ஈடுபத்துவது சம்பந்தமாக பிராந்திய முகாமையாளரினால் உறுதிப்படுத்திய சேவையில் ஈடுபடுத்தும் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

VII மாதாந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை பற்றிய குறிப்புக் கட்டணம் 1000.∴ஸ்ரீ ரூபாவாகும்.

VIII முற்கொடுப்பனவு அட்டையைப் பயன்படுத்தி டிக்கட்டுகளை வழங்கும் இயந்தரம்